# தமிழ்நாடு மாநில வாணிப கழகம் லிட்.,
## மாவட்ட மேலாளர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்.இருப்பு:திருபுவனம்

ந.க.எண் 63/B/2015 நாள்:25.06.2015

**<u>வாகன ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>**

திருவாரூர் மாவட்டம் விளமல் கிராமம் பெருந்திட்ட வளாகத்தில் (மாஸ்டர் பிளான் காம்பளக்ஸ்) அமைந்திருக்கும் டாஸ்மாக் மதுபான கிடங்கிலிருந்து இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானசரக்குகளை நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நான்கு வட்டங்களில் (நாகப்பட்டினம், கீழ்வேளுர், வேதாரண்யம் மற்றும் திருக்குவளை வட்டங்கள்) அமைந்துள்ள அனைத்து மதுபான சில்லறை விற்பனை கடைகளுக்கு மதுபான பெட்டிகளை எடுத்துச்சென்று ஒப்படைக்க போக்குவரத்து ஒப்பந்ததாரரிடமிருந்து கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் முகவரி | மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், நாகப்பட்டினம் மாவட்டம், இருப்பு திருபுவனம். |
| 2. | ஒப்பந்தம் செய்யப்படும் பணிகள் தொடர்பான விபரம் | நாகப்பட்டினம் கோட்டத்தில் உள்ள கீழ்வேளுர்,வேதாரண்யம், நாகப்பட்டினம் மற்றும் திருக்குவளை வட்டங்களில் அமைந்துள்ள 1 கீமீ முதல் 100 கீ.மீ தூரம் வரையுள்ள மதுபான கடைகளுக்கு திருவாரூர் மொத்த விற்பனை கிடங்கிலிருந்து தினசரி சுமார் 4500 பெட்டிகள் மதுபானம் / பீர் (IMFS / BEER) ஏற்றிச்சென்று ஒப்படைப்பது. |
| 3. | விண்ணப்பம் கிடைக்குமிடம் | மாவட்ட மேலாளர், அலுவலகம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 80, தொழிற்பேட்டை வளாகம் திருபுவனம். 612 103. |
| | | |
| 4. | விண்ணப்ப படிவம் விலை, செலுத்தும் விபரம் | விண்ணப்பத்தின் **விலை ரூ.1050/–** (ஆயிரத்து ஐம்பது மட்டும்) கேட்பு வரைவோலையாக **மாவட்ட மேலாளர், டாஸ்மாக், நாகப்பட்டினம்** என்ற பெயரில் கும்பகோணத்தில் மாற்றத்தக்க வகையில் செலுத்த வேண்டும். |
| 5. | விண்ணப்பம் எந்தத் தேதி முதல் எந்தத் தேதி வரை பெறலாம் | விண்ணப்பம் **26.06.2015 காலை** 10 மணி முதல் **16.07.2015 மாலை 5** மணி வரை மட்டும் (அலுவலக நாட்களில் மட்டும், சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களை தவிர்த்து) |
| 6. | செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத் தொகை (E.M.D) (By DD only) | ரூ. 10,000/–(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) கேட்பு வரைவோலையாக மாவட்ட மேலாளர், டாஸ்மாக், நாகப்பட்டினம் என்ற பெயரில் கும்பகோணத்தில் மாற்றத்தக்க வகையில் செலுத்த வேண்டும். |
| 7. | போக்குவரத்து பணிக்காக கோரப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை | குறைந்தபட்சம் 6 லாரிகள்/மினி லாரிகள் சொந்தமாக வைத்திருக்கவேண்டும். |
| 8. | விண்ணப்பிக்கும்முறை | மூடி முத்திரையிடப்பட்ட உறைகள் இரட்டை கவர்களில் வணிக ஏலம் (Commercial bid) மற்றும் விலைப்புள்ளிகள் (Price Bid) அனுப்ப வேண்டும். |
| 9. | போக்குவரத்து செய்யப்பட வேண்டிய மதுபான பெட்டிகளின் எண்ணிக்கை | அலுவலக வேலை நாட்களில் தினசரி சுமார் 4500 மதுபான பெட்டிகள் (IMFS/BEER) சில்லறை விற்பனை கடைகளுக்கு எடுத்துச்செல்ல வேண்டியிருக்கும். |
| 10. | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விண்ணப்பதாரர் நேரில் நாகப்பட்டினம் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்ப்பதற்கான கடைசி நாளும், நேரமும் மற்றும் இடமும். | **17.07.2015 மாலை 3** மணி வரை<br><br>மாவட்ட மேலாளர், அலுவலகம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 80, தொழிற்பேட்டை வளாகம் திருபுவனம். 612 103 |

| | | |
|---|---|---|
| | | |
| 11. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடமும், நாளும் மற்றும் நேரமும் | மாவட்ட மேலாளர்,அலுவலகம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 80, தொழிற்பேட்டை வளாகம் திருபுவனம். 612 103. **17.07.2015 மாலை 4.00** மணி |
| | | |
| 12. | ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கும் முறை | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொள்ளும் நபர்களில் எவர் குறைந்த தொகையை குறிப்பிடுகிறாரோ டெண்டர் விதிமுறைக்கு உட்பட்டு அவரே போக்குவரத்து ஒப்பந்ததாராக தேர்ந்தெடுக்கப்படுவார் அல்லது பேச்சுவார்த்தை மூலம் நியமனம் செய்யப்படுவார். |

**<u>போக்குவரத்து ஒப்பந்த நிபந்தனைகள்</u>**

1. திருவாரூர் மொத்த மதுபான கிடங்கிலிருந்து நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் கோட்ட கடைகளுக்கு ஒரு போக்குவரத்து ஒப்பந்ததாரர் தேர்வு செய்ய குறைந்தபட்ச ஏலத்தொகையுடன்கூடிய முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
2. மதுபான கடைகள் அமைந்துள்ள இடம் பற்றிய விவரத்தினை நாகப்பட்டினம் மாவட்டம், டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.
3. சரக்குகளை ஏற்றிச்செல்லும் பணியில் குறைந்த பட்சம் 2 வருடமாவது அனுபவம் இருக்கவேண்டும். கடந்த 2 ஆண்டுகளில் குறைந்தது 15 லட்சத்திற்கு வர்த்தகம் (Turnover) செய்திருக்க வேண்டும்.
4. மேலும் மதுபானங்களை மதுபான கிடங்கிலிருந்து ஏற்றிச்சென்று சம்மந்தப்பட்ட கடைகளுக்கு சேர்க்கும்போது ஏற்படும் உடைந்த மற்றும் காணாமல் போகும் பாட்டில்களுக்குரிய அதிகபட்ச சில்லறை விலையை சம்மந்தப்பட்ட கடைகளுக்கு நேரில் வழங்கவேண்டும். இன்வாய்ஸ்படி ஏற்றிச்செல்லப்பட்ட மதுபானங்கள் குறைவில்லாமல் முழுவதும் பெற்றுக்கொண்டதாக கடையில் பணிபுரியும் ஊழியர்களின் கையொப்பம் பெற்று அதனை அலுவலகத்தில் தினசரி ஒப்படைக்கவேண்டும்.
5. அனைத்து ஒப்பந்தபுள்ளிகளையும் (அல்லது) எந்தவொரு ஒப்பந்தபுள்ளியையும் எவ்வித காரணங்களையும் கூறாமலேயே நிராகரிக்க மாவட்ட மேலாளருக்கு முழு அதிகாரம் உள்ளது.
6. தேர்வு செய்யப்பட்ட டெண்டர்தாரர்கள் ரூபாய் 1.00,000/- (ஒரு லட்சம்) வைப்புத்தொகையாக (Security Deposit) டெண்டர் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதிகளிலிருந்து 2 தினங்களுக்குள் வைப்புத்தொகையினை வங்கி வரைவோலையாக மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் ஆஜர்படுத்த தவறினாலோ (அல்லது) டெண்டர் வேண்டாம் என்று தெரிவித்தாலோ அவர்கள் செலுத்திய டேவணி காப்புத்தொகை (EMD) திரும்ப வழங்கப்படமாட்டாது மேலும் இந்தத்தொகை டாஸ்மாக் நிறுவனத்திற்கு ஆதாயம் செய்யப்படும்.
7. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத்தொகை அவர் செலுத்தவேண்டிய காப்புத்தொகைக்கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளியில் தேர்ந்தெடுக்கப்படாத நபர்களின் பிணைவைப்புத்தொகை ஒப்பந்தப்புள்ளி வேலைகள் முடிந்தபின் திருப்பிதரப்படும்.
8. ஒப்பந்ததாரர்கள் தங்களது பெயரில் உள்ள வாகனங்களுக்கான அசல் பதிவுச்சான்றிதழ், காப்பிட்டுச்சான்றிதழ் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் பதிவுறுதாளுடன் நேரடி பார்வைக்காக டாஸ்மாக் அலுவலகத்தில் வாகனங்களை நிறுத்திவைக்கப்படவேண்டும்.
9. தமிழ்நாடு மாநில வாணிபக்கழக விதிமுறைகளின்படி தொழிலாளர் வைப்பு நிதி ஆணையத்திலிருந்து சுமைதூக்கும் தொழிலாளர்களுக்குரிய EPF Code No பெற்ற போக்குவரத்து ஒப்பந்ததாரர்கள் மட்டுமே டெண்டரில் பங்குகொள்ள தகுதி உடையவர்கள். மேலும் தேர்வு செய்யப்பட்ட நாள் முதல் பிரதி மாதம் டாஸ்மாக் மதுபான கிடங்கில் பணிபுரியும் சுமைதூக்கும் தொழிலாளர்களின் EPF தொகை செலுத்தப்பட்டதற்கான உரிய ரசீதை ஒப்படைத்த பிறகுதான் பில் தொகை வழங்கப்படும்.
10. வாகனங்கள் பிரத்யேகமாக டாஸ்மாக் நிறுவனத்தின் மதுபான வகைகளை மட்டுமே எடுத்துச்செல்லக்கூடியதாக இருக்கவேண்டும். வேறு நிறுவனங்களின் போக்குவரத்து ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ள வாகனங்களை டாஸ்மாக் ஒப்பந்த புள்ளிக்கு அனுப்பப்படும் டெண்டரில் குறிப்பிடக்கூடாது.

| | |
|---|---|
| | 11. திருவாரூர் டாஸ்மாக் கிடங்கிலிருந்து நாகப்பட்டினம் கோட்டத்தில் கீழ்வேளுர்,வேதாரண்யம், நாகப்பட்டினம் மற்றும் திருக்குவளை வட்டங்களில் உள்ள சில்லறை மதுபான கடைகளுக்கு சுமார் 4,500 வரை மதுபான பெட்டிகள் மற்றும் பீர் வகைகளை லாரிகள்/மினி லாரிகள் மூலம் எடுத்துச் செல்லவேண்டியிருக்கும்.<br>12. டெண்டரில் கலந்துகொள்ளும் ஒப்பந்ததாரர் குறைந்தபட்சம் மேற்கூறையுடன் கூடிய 6 லாரிகள்/மினி லாரிகள் விண்ணப்பதாரர் பெயரில் வைத்திருக்க வேண்டும்.<br>13. டேவணி காப்புத்தொகையாக (Earnest Money Deposit) ரூ.10,000/-க்கு வங்கி கேட்பு வரைவோலையினை மாவட்ட மேலாளர் டாஸ்மாக் நாகப்பட்டினம் என்ற பெயரில் கும்பகோணத்தில் மாற்றத்தக்க வகையில் எடுத்து வணிக ஏல ஆவணங்களுடன் இணைக்கப்பட்டும் (Commercial Bid) மற்றும் விலைப்புள்ளி (Price Bid) ஆகியவைகளை தெளிவாக பூர்த்தி செய்தும் தனித்தனி உறைகளில் வைத்து மூடி முத்திரையிட்டு அவ்விரு உறைகளையும் ஓர் உறைக்குள் வைத்து அந்த உறையையும் மூடி முத்திரையிட்டு அனுப்பவேண்டும். டேவணி காப்புத்தொகை இணைக்கப்படாத டெண்டர்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வணிக ஏலத்தில் தேர்வு செய்யப்படாத டெண்டர்தாரர்களின் விலைப்புள்ளி பிரிக்கப்படமாட்டாது. சரியாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தபுள்ளி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.<br><br>இந்த புதிய டெண்டர் 21.07.2015 முதல் 20.07.2016 வரையிலான ஓராண்டு காலத்திற்கு செல்லத்தக்கதாகும். |

இடம்: திருபுவனம்.

நாள்:25.06.2015

துணை ஆட்சியர்/மாவட்ட மேலாளர்
டாஸ்மாக் லிட்.,
நாகப்பட்டினம் மாவட்டம்.
இருப்பு:திருபுவனம்.